Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28 ம் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத்-௬௩] யாழ்ப்பாணம்:- கர ஹு புரட்டாதிமீ உ௩ உ செவ்வாய்க்கிழமை (9 அக்டோபர் 1951) [இல.-௹௩]

## சிவஞானபோதச் சொற்பொழிவு

— திரு. V. P. காந்திமதிநாதபிள்ளை அவர்கள் —

( முற்றொடர் )

உயிர்கட்கு இறத்தல் பிறத்தல்
முதலியவற்றை நியதி செய்பவன்
முதல்வனே

இருவினை உயிர்கட்கு இறத்தல் பிறத்தல் முதலியவற்றை நியதி பண்ணுமென்றோம். என்றால் அவ்வினை தானே நியதிபண்ணுமா? வேறொருவன் ஏவல்வழிநின்று நியதி பண்ணுமா? என்பதை ஆராய்வாம். வினை உயிர்கட்கு இறத்தல் பிறத்தல்களைச் செய்தற் பொருட்டு அவ்வுயிரினைப் பற்றி நிற்குமென்றோம். அது சடமானதால் தானே உயிரினைப் பற்றியாது. உயிர் சித்தென்றாலுந் தானே அறியுந் தன்மையுடையதன்று. முதல்வன் அறிவிக்கவே அறியுந் தன்மைத்து என்பது வருஞ் சூத்திரத்தில் விளக்கப்படும். ஆகவே அவ்வினை முதல்வனாலேயே உயிர்கட்குக் கூட்டப்படல்வேண்டும். இன்றேல் வினை உயிரினைப் பற்றிக்குமாறில்லை. உயிர் இறத்தல் பிறத்தல்களையும் சுக துக்கங்களையும் பொருந்துமாறுமில்லை. ஆதலால் முதல்வனே இவ்வினையைக் கருவியாகக் கொண்டு உயிர்க்கு அப்பலன்களைக் கொடுக்கின்றான். ஓர் அரசன் தன் பாடிகாவலனைக்கொண்டு தன் நகரியைப் பாதுகாக்குங்கால் அப் பாடிகாவலன் அவ்வரசன் ஏவல்வழி நின்று பாதுகாப்பதுபோல வினையும் முதல்வன் ஆணைவழி நின்று உயிர்கட்கு அப்பலனைக் கொடுக்கும். என்றால் உயிர்கட்கு இறத்தல் பிறத்தல் முதலிய பலன்களைக் கொடுப்பது அவற்றின் வினையா? அன்றி முதல்வனா? எனில் வினையன்று முதல்வனே. உழவர் செய்யுந் தொழிற்குத் தக்கபலனை உழவுத் தொழிலே கொடுக்குமென்று சொல்வோம். உழவுத்தொழில் கொடுக்குமென்பது அப்பயனை நியதியிடுவதன்றி வேறில்லை. உயிர்கள் செய்யும் வினையும் அதுபோல்வதே. இவ்வினை உயிர்கட்குப் பலன்களை நியதியிட்டு மாத்திரம் கொடுக்கும். முதல்வனே அந்நியதிப்படி பலன்களைக் கொடுப்பவன். அதனால் முதல்வன் வினையின் பரதந்திரனாகான். ஓர் எசமான் தன் வேலையாளர்க்கு அவரவர் வேலைக்குத் தக்க கூலி கொடுப்பதால் அவ் வேலையாளரால் அவ் வெசமானன் பரதந்திரனாதலில்லை. முதல்வனும் அவ்வாறே. இக் கருத்துக்களை யெல்லாம் உணர்த்தவே இச்சூத்திரம் 'இருவினையிற் போக்குவரவு புரிய' என நிறுத்தாது 'ஆணையின் இருவினையின்' என இயைத்து பொருள் தரும்படி 'இருவினையிற் போக்குவரவு புரிய' என்பதை 'ஆணையின' என்பதனோடு அடுத்துவைத் தோதியது.

முதல்வன் உயிர்களோடு
ஒன்றாய் நிற்பன்

பெத்த உயிர்கள் இறத்தல் பிறத்தல் புரியுமென்றோம். ஒருயிர் தான தங்கிய பருவுடலைவிட்டு நீங்குதலை அதன் இறத்தலென்றோம். மீள வேறோர் பருவுடலிற் றங்க வருதலை அதன் பிறத்தலென்றுஞ் சொன்னோம். ஒருயிர் யாதானும் ஒரு பருவுடலிற் றங்கிநிற்கும்போது அதனாற் செய்யப்படும் செயல்களே சூக்கும வினையாய்மாறி, அதனால் அப்பாலெடுக்கப்படும் தூல தேகத்தினையும் அதனோடு கூடி அனுபவிக்குஞ் சுக துக்கங்களையும் நியதிப்படுத்துமென்றுஞ் சொன்னோம். அவ்வாறு நியதிப்படுத்துவதும் முதல்வன் ஏவல்வழியேயென்றுஞ் சொன்னோம். என்றால் உயிர்களை வினை இயற்றும்படி செய்பவனும் அவ்வினைப் பயன்களாகிய இறத்தல் பிறத்தல்களைப் புரிந்து சுகதுக்கங்களை அனுபவிக்கும்படி செய்பவனும் இம் முதல்வனேயென முடியும். இம்முதல்வன் அவ்வுயிர்களோடு எவ்வாறு நிற்கின்றானென்பதை ஆராய்வாம்.

முதல்வன் உயிர் என்னுமிரண்டும் சடமல்ல; சித்துப் பொருள்களே. இரண்டுமே அறிவாகாரமாயுள்ள பொருள்கள்; இரண்டும் வியாபகப் பொருள்கள். ஆனால் முதல்வனது வியாபகம் எக்காலத்தும் ஒரே தன்மைத்தாயுள்ளது. அதற்கு எக்காலத்தும் எவ்விதத் தடையும் இருந்திருப்பதில்லை. உயிரினது வியாபகம் அவ்வாறன்று. அது அநாதியே ஆணவ மலத்தால் தடையுண்டு அணுவாய்க் கிடந்தது. இத்தடை நீங்குதற் பொருட்டே உயிர்க்கு உடல் முதலாயின அமைக்கப்பட்டு வருமென்று சொன்னோம். இவ்வுடலும் இத் தடையை முற்றும் நீக்கியவாறில்லை; தன்னளவிலேயே நீக்குவது. அதாவது இவ்வுடலோடு கூடியுள்ளபோதும் உயிர் அவ்வுடலுக்கு வெளியே வியாபித்தலில்லை. அப்படியே எந்த உடலோடு கூடிய போதும் அந்த உடலுக்கு வெளியே உயிர் வியாபித்து நிற்குமாறில்லை. எனவே இறத்தல் பிறத்தல புரியும் எந்த உயிரும முதல்வனைப்போல நிற்றலின்றி ஏகதேசப்பட்டு நின்றே அறியும் என முடியும்.

இவ்வாறு ஏகதேசப்பட்டு நிற்கும் உயிர்கள், இவ்வுலகப் பொருள்களை அறிந்து வினையீட்டுதற்கு முதல்வனும ஏகதேசமாய் நின்று உபகரித்தல் வேண்டுமா? அன்றி வியாபகமாய் நின்று உபகரித்தலே போதுமா? என்பதே ஈண்டு ஆராயவேண்டுவது. உயிர் உடலினை அறியச் செய்தற்கு அவ்வுடலினைப்போற் றானும் ஏகதேசமாய் அவ்வுடலினோடு உடலாய் நின்றால் மாத்திரம முடியும். கண்ணொடு கண்ணாய் நின்றால் மாத்திரம கண் காணும். அப்படியே எந்த உடலோடும உயிர் அந்த உடலேயாய் நின்றால்மாத்திரம் அந்த உடலிலுள்ள எந்த இந்திரியமும அறியும். முதல்வன் உடலோடு கூடியிருக்கும் உயிரினை அற

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## தோத்திரம்

மகா நவமி நாள்.

### துர்க்கை

ஆதியாயந்தத் தினந்தமாய் நின்றோர்க்குப்
பாதியாய் யொன்றாய்ப் பலவாகிப் பல்லுயிராய்ப்
பேதியா நின்றாய் பெருமாட்டி நின்பெருமை
சோதியா நின்றார்க் கெளிதன்றே தொல்லபமே.

### இலக்குமி

செங்கமலப் பொலந்தாதிற் றிகழ்ந்தொழிரும்
எழின்மேனித் திருவே வேலை
அங்கணுல கிருள்துரக்கு மலர்க்கதிராய்
வெண்மதியா யமரர்க்கூட்டும்
பொங்கழலா யுலகளிக்கும் பூங்கொடியே
நெடுங்கானிற் பொருப்பின் மண்ணில்
எங்குளைநீ யவணன்றோ மல்லல்வளஞ்
சிறந்தோங்கி யிருப்ப தம்மா.

### சரசுவதி

தாவறு மூலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் றுணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசை புனைந்து போற்றுவாம்.

## ஒரு நல்லதங்காள்

வில்லிகல்கொடோ என்னும் ஒரு சிங்களப்பெண் தான் பெற்ற 10 வயசுப் பிராயமுள்ள மகன், 8 வயசுப் பிராயமுள்ளமகள், 2 வயசுப் பிராயமுள்ள இளையமகன் ஆகிய மூவரையுஞ் சேர்த்துக்கொண்டு அம்பலாங்கொடை விடுதிவீட்டின் புறத்துள்ள கடலுள் பிள்ளைகளை முந்தித் தள்ளிவிட்டுத் தானும் வீழ்ந்து சாக நிச்சயித்துக்கொண்டு போய்ச் சேர்ந்தாள்; தாயின் நோக்கத்தை யுணர்ந்த மூத்தமகன் மாத்திரம் தப்பியோடித் தூரத்தில் நின்று ஓலமிட்டான்; இதற்கிடையில் தாய் தன்னிரு பிள்ளைகளோடுங் கடலுட் குதித்துவிட்டாள். சமீபத்திலுள்ள கற்பாறையில் வந்திருந்த ஒரு மனுஷன் அப்பயங்கரச் செயலைக்கண்டு எழுந்தோடிப் போய்க் கடலுட் குதித்து, நீரில் மிதக்கின்ற இரண்டு பிள்ளைகளையும் பின்பு தாயையும் உயிரோடு கரை சேர்த்தான்; பம்பலப்பிட்டியா நீதிபதி அந்தப் பெண்ணை ஒருவருட காலத்திற்கு 450 ரூபா நன்னடத்தைப் பிணையில் எச்சரித்து விட்டுள்ளாராம்; பிள்ளைகளுடன் கடலுள் வீழ்ந்துசாக எத்தனித்தமைக்குக் காரணஞ் சொல்லப்படவில்லை.

## வட மத்திய மாகாணத்திற் பருத்தி விருத்தி

வடமத்திய மாகாணத்திற் பல இடங்களிற் பருத்திச் செடியை ஆங்குள்ள விவசாயிகள் விருத்தி பண்ண முயற்சிசெய்து வருகிறார்களாம்; ஒரு ஸ்தானத்திலுள்ள ஆயிரம் ஏக்கர்கொண்ட நிலத்திற் பருத்திபயிடும்படி விவசாயிகளுக்கு அரசாங்கவிவசாயப்பகுதியார் நல்ல பருத்தி விதை உதவியுளார்களாம்; இன்னும் கேட்பவர்கட்குப் பருத்தி விதையுதவ அரசினர் ஆயத்தமாகவிருக்கின்றனராம்.

## மூவருக்கு மரணதண்டனை

கண்டியில் நடந்த உயர்தர நீதிமன்ற விசாரணையில், தெல்தெனியாவைச்சேர்ந்த ஜேம்ஸ் அப்புஹாமி, திலகரத்தின, லொக்குபண்டா என்னும மூவரையும், யூரிமார் ஏகசம்மதமாகக் கொலைக்குற்றவாளிகள் என அபிப்பிராயப்பட்டமையினால், நீதியரசர் குருஷியபன் அம்மூவருக்கும் மரணதண்டனை விதித்தனர்; இவ் வழக்கு விசாரணை 32 சாட்சிகளைக் கொண்டமையினால் 8 நாளாக விளக்கப்பட்டதாம்; எதிரிகள் செய்த கொலைகள்:- 35 வயசுவரையிலுள்ள கந்தசாமிப்பிள்ளையும், 26 வயசுவரையுள்ள மனைவி காமாட்சியும் குடிமனைக்குச் சற்றுத் தூரமான ஒரு வீட்டில் தங்கள் இரண்டு வயசுக் குழந்தையோடு வசித்தனர்; இவர்களிடத்தில் ஆபரணம் பணம் உண்டென்பதைக் குறித்த மூவரும் அவதானித்திருந்தார்களாம்; ஒரு நாள் நடுச் சாமத்தில் இந்த மூவரும் சென்று கந்தசாமிபிள்ளையையும் மனைவியையும வெட்டிக் கொன்றுவிட்டு அவர்களிடத்திருந்த 750. ரூபா பெறுமதியான நகை பணம் என்னுமிவற்றைத் திருடிக்கொண்டு அவர்களுடைய குழந்தை யணிந்திருந்த ஒரு சங்கிலியையும் பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்களாம். அதிகாலையில் இக்குழந்தை தாயின் பிணத்தண்டை யிருக்கக் காணப்பட்டதாம்; திருடர்கள் இக்குழந்தையைமாத்திரம உயிரோடு விட்டுவிட்டார்கள்.

## உதயசங்கர்

சிறந்த நடன ஆசிரியராகிய உதயசங்கரும், அவர் மனைவியாகிய அமலாதேவியும், மாணாக்கரும், இந்த அக்டோபர் மாசம முடிவதன்முன் கொழும்புவந்து சேர்ந்து சில நடனங்கள் நடத்துதற்கான ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். கர௵ புரட்டாதி மீ ௨௩ ௳ செவ்வாய்க்கிழமை

## மகிஷ சம்மாரம்

இற்றைத் தினம் துர்க்காதேவி கொடியவனாகிய மகிஷாசுரனைக் கொன்றதன் ஞாபகார்த்தமாக அத் துர்க்கையாகிய சத்தியைச் சைவ மக்கள் பயபத்தியோடு பூசித்து வணங்கித் தூய முறையிற் கொண்டாடுந் தினமாகும்; இத்தினத்தின் மகத்துவத்தைப் பற்றியும் மகிஷாசுர சம்மாரத்தைப்பற்றியும் இப் பத்திரிகையில் முன்னர்ப் பலமுறை யெடுத்துக் கூறியுள்ளோம்; ஆனதால் இப்பொழுது நாம் அந்தப் பழைய விஷயத்தை யெடுத்துக் கூறுவதை விடுத்துப் புதிதொன்று புகலலானோம்; இதுவே மகிஷசம்மாரம்; மகிஷாசுர சம்மாரமென்றால் மகிடன் என்னும் அசுரனை(த் துர்க்காதேவி) வதைத்தமையைக் குறிக்கும்; மகிஷம் - எருமை, எருமைத்தலையுடைய அசுரன் மகிஷாசுரன்.

இது இங்ஙனமாக, மகிஷ சம்மாரம் என்பது எருமைகளைக் கொலை செய்தல் என்னும் பொருள் படும்; இதனையிட்டு நாம் இப்பொழுது ஆராய்தலாகும்; இந்த இலங்கையிலே இக்காலத்தில் எண்ணிறந்த கோழிகள், ஆடுகள், மாடுகள் இறைச்சியின் பொருட்டுக் கொல்லப்படுவதோடு நில்லாது, எருமைகளும் கறியின் பொருட்டு நாள்தோறும் கொல்லப்படுகின்றன; கொழும்பு நகரிலே ஒரு மாசத்தில் 700 எருமைகளுக்கு மேற்பட இறைச்சியின் பொருட்டுக் கொல்லப்படாதென்பது அரசாங்க விவசாயப் பகுதியார் செய்துகொண்ட உடம்படிக்கை; ஆனால் அங்குள்ள சுகாதாரச் சந்தை நிர்வாகசபையார் மாசம் 700 எருமை குறித்த பட்டினத்தின் மாமிச தேவைக்குப் போதாவெனவும், ஆனதினால் தொகையைச் சற்றுக் கூட்டி அநுமதி செய்யவேண்டுமெனவும் கொழும்பு நகரசபையைக் கேட்டபோது அச்சபை அதற்கு இசைந்ததாம்; காரணம் இறைச்சி யடித்து விற்போர் இதுகாறும் அடித்து வந்த எருமைகளின் இறைச்சி நகரத்துள்ள மக்களின் உணவிற்குப் போதியதல்லவென முறைப்பட்டமையேயாகும்.

இலங்கை யரசினராக, விவசாயப் பகுதியாராக, வேறெவராகக் கொலைசெய்யப்படும் எருமைகளைக் கட்டுப் படுத்துவது, சீவகாருண்யத்தை உத்தேசித்தல்ல; இந்த இலங்கையிலே விவசாய மெனப்படும் பயிரிடுந் தொழிலுக்கு உழுதற்கும் வண்டி யிழுத்தற்கும் இன்றியமையாதவை எருத்துமாடும் எருமையு மாகும்; இவற்றுள் மாடுகள் நாள்தோறும் பன்னூற்றுக் கணக்கானவை இறைச்சியின் பொருட்டுக் கொல்லப்படுகின்றன; இறைச்சிக்கு மாடு விற்கும் பொல்லாச்செயல் இப்பொழுதிந்த யாழ்ப்பாணநாட்டிலும்பரவிக்கொண்டது; இக்காரணத்தினால் மாட்டுச் செல்வமும் அதுவாயிலாகப் பயிரிடுந் தொழில் விருத்தியும் இங்கே குன்றத் தலைப்பட்டன.

இனி, இலங்கையின் பெரும் பாகமாகிய வன்னி நாட்டிலும், சிங்கள நாடு முழுவதிலும் எருமைகளே வயல் தோட்டம் உழுதற்பொருட்டுப் பெரிதும் உபயோகப்படுவனவெனலாம்; இப்படியான எருமைகள் கொழும்பில் மாத்திரமல்ல, இலங்கையின் ஏனைய பட்டினங்களிலும் இக் காலத்தில் நாள்தோறும் நூற்றுக் கணக்கிற் கொல்லப்படலாயின; இங்ஙனம் தின்னற்பொருட்டு, இவ்வெருமைகள் கொல்லப்படுமேல், நாள்தோறும் எருமைகளின் தொகை குன்றிவரிற் காலகதியில் வயலுழுதற்கு எருமை கிடையாமையினால் ஏழை விவசாயிகள் கஷ்டப்படவேண்டி நேருமல்லவா?

எருமைகளைக்கொண்டு எல்லா மக்களும் தங்கள் தங்கள் சொந்த வயல்களை மாத்திரம் உழுதுகொள்வரென்றெண்ணிக் கொள்ள வொண்ணாது; ஏழைகளாயுள்ள மக்கள் தங்களுக்குரிய அற்ப வயல் நிலங்களை உழுது முடித்தபின் செல்வர்களிடத்துள்ள பரந்த வயல்கள் தென்னந்தோட்டம் முதலியவற்றைக் கூலிக்கு உழுது, அந்தக் கூலிகொண்டு தங்கள் எருமைக்கு இரையிட்டுத் தாங்களும் வறுமையிற் செம்மையாக வாழ்வர்; தம்மிடத்துள்ள எருமைகளை விற்பது அந்த உரியவருடைய சம்மதத்தைப் பொறுத்ததுதானே யென்றால், பசிபஞ்சத்தினால் எந்த நேரமும் பெரிதும் வருந்தும் ஏழைமக்கள் தங்கள் மிருகங்களுக்கு, இறைச்சிக்காரர்பெறுமதியைக் காட்டிலும் மேலதிகமான விலை கொடுப்பரென்றால், அப் பணத்திற்கு ஆசைப்பட்டு விற்பார்கள்தாமே; ஆனதினால் இப்படியான விஷயத்திலே நாட்டின் நன்மையை, உணவு விருத்தியை விரும்பும் அரசினர் தங்களால் இயன்றவரையில் மாடுகளை எருமைகளைக் கண்டபடி கொலை செய்யாமலும் விற்காமலும் கட்டுப்பாடு செய்தல் ஆவசியகமாகும்.

# உலகம்பலவிதக்கதை

(முற்றொடர் — 24)

"பாம்பின்கால் பாம்பறியும்"

"அன்பான ராதா, நான் விவாகமின்றி யிருந்தால், நீரும் அப்படியே விவாகஞ் செய்யாதிருக்கக் காரணமில்லையே; மேலும், ஒரு பெண்ணையல்ல, இரு பெண்களை என்று சொன்னீரே, மற்றப் பெண் யார்? நான் அறியலாமா?" என்று ஆவலுடன் கேட்டான் பத்மநாதன்: "ஐயா, என்னைக் கல்யாணஞ் செய்து ஏற்றுக் கொள்ள, இல்லையேல் ஏற்றுக்கொள்ளாமல் விட, உங்களுக்கு அதிகாரமுண்டே யொழிய, என்னை வேறொரு கல்யாணஞ் செய்துகொள்ளென்றேனும், விவாகமில்லாமல் நான் இருக்கவொண்ணுதென்றேனுஞ் சொல்வதற்கு உங்களுக்கு அதிகாரமில்லையே; மற்றப் பெண் யாரென்பது உங்களுக்கு விளக்கமல்லவா: என்வாயாற் சொல்லக் கேட்கவேண்டுமென்று விரும்புகிறீர்கள் போலும்; சொல்லி விடுகிறேன்; வேறொருத்தியுமல்லள்; உங்கள் சொந்த மைத்துனியாகிய அந்த உத்தமி வனசாதான் மற்றப்பெண்" என்று அழுத்தமாகச் சொன்னாள் ராதா; கேட்ட பத்மநாதன் நிடுக்குற்றான்; சற்றுநேரஞ் சிந்தித்தான்; இந்த ராதாவின் போக்கு எனக்குப் புலப்படவில்லையே என்று தன்னுள்ளில் யோசித்தான்; பத்மநாதன் ராதாவை ஆச்சரியத்தோடு பார்த்து, "ராதா, வினவுகிறேனென்று குறையெண்ணாதீர், வனசாவைப் பற்றி உமக்கு முந்தித் தெரியுமா? அவளை நேரிற் பார்த்ததுண்டா" என்று இதமாகக் கேட்டான்; "ஐயா, வனசாவை நான் எப்போதாயினும் நேரிற் பார்த்திலேன்; ஆனால் என்னுடன் படித்த ஒரு பிள்ளை வனசா இருக்கும் வீட்டிற்குச் சமீபத்தில் வசிப்பவள்; வனசாவிற்கு இனமானவளோ, இல்லையேற் சினேகமானவளோ நான் நிச்சயமாயறியேன்; இந்த வனசாவைப் பற்றிப் பாராட்டிப் பலமுறையும் எனக்குச் சொல்லிய துண்டு; அந்த வனசாதான் உங்கள் மைத்துனியாக விருக்கலாமென் றெண்ணுகிறேன்; அப்படிப்பட்ட உத்தம குணமுடைய பெண்ணை விவாகஞ் செய்துகொள்வதாக நீங்கள் முந்தி வாக்களித்து விட்டுப் பின்பு வாக்குத் தவறினால், அந்தக் கன்னிகை போன்ற நெறியானவர்கள் விவாகமில்லாமலே காலங்கழிக்க வேண்டி நேரும்; "பாம்பின் கால பாம்பறியும்" என்ற முறையாகப் பெண்களின் இயல்பையும் உள்ளக் கிடக்கையையும் பெண்கள் நுட்பமாய் அறிதல் முடியும்; ஆடவர்களாகிய நீங்கள் பெண்களை ஏதோ விளையாட்டிற்காகிய பாவைகளென எண்ணிக்கொண்டு, நீங்கள் நினைத்த நினைத்தபடியெல்லாஞ் செய்யலாமெனவுந் தவறுகளெண்ணிக்கொள்ளுகிறீர்கள்; பெண்களுள் தவறு செய்பவர்களும் உண்டென்பதை நான் மறுக்கவில்லை; அந்தச் சிலருக்காக எல்லாப் பெண்களையுந் தவறுடையவர்களை, இலகுவில் ஏமாந்து போகக்கூடியவர்களென்று ஆண்கள் மதித்தல் புத்தியீனமாகும்; அந்த வனசா உங்களுக்கு நிச்சயிக்கப்பட்ட கன்னிகை யென்பதை முந்தியறிந்திருந்தால், நான் உங்களுக்கு வாழ்க்கைப்படவேண்டுமென்று கனவிலும் நச்சியிருக்கமாட்டேன்; இது நிசம்; அந்த இரகசியத்தை நீங்களதொடக்கத்தில் எனக்கு மறைத்திருந்தது உங்கள்மேற்குற்றம்; உங்கள் வரலாறு முழுவதையும் முற்றாக விசாரித்தறியாமல் உங்களுக்கு நான் வாழ்க்கைத்துணைவியாக வரவேண்டுமென ஆசைப்பட்டமை என்மேற் பெருங் குற்றம்; நான் செய்த குற்றத்திற்கு நானே என்னைத் தண்டித்துக் கொள்ள நிச்சயித்துக்கொண்டேன்; அந்தத் தண்டனைதான் நான் இம்மையில் விவாகஞ் செய்யப்படுதலின்றி ஒன்றியாயிருந்து காலங்கழித்தல்; ஆனால் நீங்கள் சிறிது பிழை செய்திருந்தாலும், அந்தப்பிழையைப் பொறுக்கும்படி இறைவனை இரந்து வேண்டிக்கொண்டு, வனசா வருந்தா வண்ணம் அவளைக் கல்யாணஞ் செய்வதே முறை; இப்படி நீங்கள் செய்து கொண்டாற்றான் நான் மகிழ்ச்சியடைவேன்" என்று கண்களில் நீர் ததும்பச் சொன்னாள் ராதா.

"என்னைச் சோதிக்கிறாளோ?"

ராதாவின் வார்த்தைகள் பத்மநாதனைத் தடுமாறச் செய்தன; "என்ன! நூதனம்! இந்த ராதா, சற்று முன்னர்ப் பேசியதற்கும் இப்பொழுது பேசுவதற்கும் நேர்முரண்பாடு காணப்படுகிறதே! இந்தப் பெண் என்னைச் சோதிக்கின்றாளோ, சோதிப்பதானால் இவள் சொல்லி முடிக்கும்போது கண்கலங்கக் காரணமில்லையே; வனசாவை விட்டுத் தன்னையே பெண்ணாகக் கொள்ள வேண்டுமென்று பிடிவாதஞ் செய்த இந்த ராதா, இப்பொழுது நான் வனசாவையே விவாகஞ் செய்ய வேண்டுமென்றும், தான் விவாகமின்றிக் காலங் கழிப்பதாகவும் வற்புறுத்திச் சொல்லுகிறாளே! இது தெய்வத்தின் செயலோ! ஆம், அப்படியிருக்கவுங்கூடும்! என் சகோதரி கமலா வனசாவைப்பற்றிச் சொல்லும்போது, அவள் பெரிதுந் தெய்வபத்தியுள்ளவளென்றுஞ் சொன்னாள்; அந்த வனசா தெய்வத்தை வேண்டத் தெய்வம் இவள் மனசையும் என் மனசையும் மாற வைத்ததோ! ஒன்றுமறியேனே! மேலும் இந்த ராதா வனசாவையே விவாகஞ் செய்ய வேண்டுமென எனக்கு அழுத்திச் சொல்லிவிட்டு, தான் விவாகமின்றிக் காலங் கழிப்பதாகச் சொல்லுகிறாளே! இது பெரும் பழியான சொல்லல்லவா! ஏதோ இவளுக்கு நம்மாற் சொல்லக்கூடிய சமாதானத்தைச் சொல்லிப்பார்ப்போம்" என்று சிந்தித்துக் கொண்டு அவளை அன்புடன் நோக்கி "ராதா, நீர் முன் சொல்லிய சொற்களைக்காட்டிலும் இப்பொழுதுசொல்லுஞ் சொற்களே என்னுள்ளத்தை அதிகம் வருத்துகின்றன: நான் விரும்பியபடி என் மைத்துனியைக் கல்யாணஞ் செய்ய, நீர் மாத்திரம் விவாகமின்றி யிருப்பதாகச்சொல்லுவது முறையா? நான் அப்படிச் செய்தற்கு இசைவேனென்று நீர் எப்படிக்காத்திருக்கலாம்? நீர் செய்த பிழைக்கு நீர் உமமைத் தண்டிக்கின்றீரென்றால், நான் செய்தபிழைக்கு என்னையும் நானே தண்டிக்கவேண்டுமெனபதல்லவா முறை; அப்படி நான்செய்தற்கு நீர் இடையூறாக நிற்பது நியாயமாகுமோ? நான் முந்தியே உண்மையைச் சொல்லாமையினாற்றானே, நீர் என்னை விவாகஞ் செய்யவேணுமென்று விரும்பி வந்தது; ஆனதால் நானல்லவோ பெருங்குற்றவாளி; ஆனதால் நீரும் உம்முடைய இஷ்டப்படி செய்யும்; நானும் என் விருப்பப்படி செய்கிறேன்; இதுதான் நீதி" என்றான் பத்மநாதன்; கேட்ட ராதா புன்னகைசெய்து "ஐயா, ஞாயஞ்சொல்லி என்னைச் சமாதானப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தினாற்போலும், தவறிப்பேசுகிறீர்கள; நான் விவாகமின்றி ஒன்றியாய்க் காலங் கழிப்பதால் நானொருத்தியே என்னைத் தண்டிக்கின்றேன்; நீர் அப்

தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## திருக்கோணாசலத் திருவுருவங்களின்

# ஊர்வலம்

**தீவுப்பகுதியில்**

நிகழும் புரட்டாதிமீ ௧௩உ (29-9-51) சனிக்கிழமை 2 மணியளவில் சபை ஆச்சிரம நாவலர் மண்டபத்திலிருந்து புறப்பட்டு மேற்படி திருவுருவங்கள் பண்ணைத்துறையை யடைந்தன. அத்துறை ஆபக்காரர் அவ்விடங்களை நன்கு அலங்கரித்து வரவேற்றனர். பின், புதிய "மாருதப்புரவீ" என்னும் பாரிய பத்திரப் பாதைமூலம் அல்லைப்பிட்டிக் கதிர்வேலாயுதசுவாமி கோவிலுக்கு எழுந்தருளச் செய்து ஆராதனை முடிந்த பின், மண்கும்பான் பிள்ளையார் கோவில், வேலணை கிழக்குச் சரஸ்வதி வித்தியாசாலை, வேலணை அரசினர் மத்திய பாடசாலை, சரவணை நாற்சந்தி என்னு மிடங்களுக்கும் எழுந்தருளச் செய்யப்பட்டன. அங்கிருந்து புளியங்கூடல் அம்மன் கோவிலுக்கு அதன் எசமானரால் சகல வரிசைகளோடும் சிங்க வாகனத்தில் எழுந்தருளச் செய்து வரவேற்கப்பட்டன. அங்கு திருக்கோணாசலத் திருப்பதிகம் பாடப்பட்டது. பின்பு சரவணை-கருவில் வீதி வழியாகச் சுருவில், ஊர்காவற்றுறை முதலிய இடங்களுக்கு இரவு 10 மணி வரையிற் காட்சி அளிக்கப் பெற்றது. அங்கும் நல்ல வரவேற்பு நிகழ்ந்தது. அங்கிருந்து ஒழிவில் வைரவர் கோவிலுக்குச் சென்று திரும்பியபோது வழியில் ஊர்காவற்றுறை நகரசங்கத்தலைவர் திரு. ச. ம. நிட்ஜ்வேயின் வரவேற்பு நிகழ்ந்தது. மேலும் ஊர்காவற்றுறைச் சிவன் கோவில், பருத்தியடைப்புக் கந்தசுவாமி கோவில், பொலிஸ் நிலையம், கடை வீதிகள் முதலிய இடங்களுக்குக் காட்சிகொடுத்துத் திரும்பவும் புளியங்கூடல் அம்மன் கோவிலுக்குச் சென்று அங்கு தங்கின. மறுநாட்காலை வேலணை—ஊர்காவற்றுறை வீதிவழியே காரைநகருக்கு எழுந்தருளச் செய்யப்பெற்றன.

—கடிதம்.

●

**சுழிபுரத்தில்**

30-9-51 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி வீதிவழியே திருக்கோணாசலத் திருவுருவங்கள் மகாதோரண வரிசைகளோடு வரவேற்று ஆராதனை செய்யப் பெற்றன. கோணேசர் திருப்பதிகம் முதலிய அருட்பாக்களைப் பாடி அடியார்கள் மகிழ்ந்தார்கள். —கடிதம்.

●

**வயாவிளான்—பலாலி தெற்கில்**

2-10-51 செவ்வாய்க் கிழமை மாலை 9½ மணியளவில் வயாவிளான அரசினர் கல்லூரி அதிபராலும் மாணவர்களாலும் திருவுருவங்கள் வரவேற்கப்பட்டன. தமிழ்மறை ஓதப்பட்டது. சகல வரிசைகளோடும் முத்துப் பந்தரில் திருவுருவங்கள் எழுந்தருளியகாட்சியாவரையும் வசீகரிக்கத்தக்கதாயிருந்தது. தாமரைக் கூண்டுவழியாகப் பட்டுவஸ்திரங்கள் வழங்கப்பட்டன. ஆராதனை சிறப்பாக நடைபெற்றது. வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாசாலை மாணவிகள் கற்பூரதீபம் வைத்தபடி கோணேசர் தேவாரங்களைப் பாடினர். பின்பு, பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலைப் பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை கோணேசர் மான்மியம், கோணேசப் பெருமானின் தேவாரப் பண்பாடு, சைவ சமய மாண்பு என்பவற்றிற் சிறந்த ஒரு விரிவுரை நிகழ்த்தினர். பின், புகைப்படம் பிடிக்கப்பட்டது. கோணேசர் தேவாரங்களடங்கிய கோணேசர் வரலாற்றுச் சுருக்கம் என்னுஞ் சிறு நூல் இலவசமாக வழங்கப்பட்டது. —கடிதம்.

●

**கட்டுவன், மயிலிட்டி முதலிய இடங்களில்**

4-10-51 வியாழக்கிழமை பகல் 12 மணிக்குமேல் கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வர்த்தலைவிளான், குரும்பசிட்டி என்னுங்கிராமங்களிற் கோணேசர் திருவுருவங்கள் ஊர்வலமாக எழுந்தருளச் செய்யப்பெற்றன. அப்போது இடங்கள் தோறும் ஆயிரக்கணக்கானமக்கள் நின்று மகாதோரணம், பூரண கும்பங்கள் நிரைத்து வழிபாடுசெய்தனர். வர்த்தலைவிளான் வீதிவழியே அவ்வூர் விநாயகர் ஆலயத்துக்குச் சென்றன. அங்கு மகாவித்துவான் பிரம்மஸ்ரீ கணேசையரால் வரவேற்கப்பெற்று விசேடபூசை ஆராதனைகள் நடைபெற்றபின் கட்டுவன், மயிலிட்டி தெருச்சந்திக் கருகாமையிலுள்ள ஞானவைரவர் ஆலயத்துக்கு எழுந்தருளச்செய்து பூசை முடிந்தபின் குரும்பசிட்டி சன்மார்க்க சபையாரால் அச்சிடுவிக்கப்பெற்ற கோணேசர் திருப்பதிகம் இலவசமாகக் கொடுக்கப்பட்டது. பின் இரவு 7 மணிவரையில் அம்பாள் ஆலயத்தைச்சேர்ந்து, அங்கிருந்து கொழும்புத் துறைக்கு எழுந்தருளச்செய்யப் பெற்றன. கடிதம்.

## திருக்கோணாசல விக்கிரகங்கள்

### வரவேற்புக் கூட்டம்

திருக்கோணேசுவர விக்கிரகங்களைப் பொகவந்தலாவப் பகுதியில் 18-10-51 ல் வரவேற்கும் முகமாக அவ்வரவேற்பைப்பற்றி ஆலோசனை செய்யக் கொட்டியாகலைப் பாஞ்சாலை மண்டபத்தில் திரு. S. விவேகானந்தராசா (D. M. O.) தலைமையில் 4-10-51 வியாழக்கிழமை பிற்பகல் 5 மணிவரை ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது; கூட்டத்தில், திருவுருவங்களை வரவேற்கும் முறைகளைப்பற்றி ஆலோசனைசெய்யப்பட்டது; பின் அவைகளை வரவேற்று நடப்பிக்க ஓர் நிர்வாகசபையைச் சபையோர் ஏகமனதாகத் தேர்ந்தபின் தலைவர் காரியதரிசிமுதலிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப் பெற்றனர். —கடிதம்.

இலங்கையின் மிகப் பெரிய

— நகை —

வியாபாரிகள்

= O =

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

ஸ்தாபனம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

## நமது கலை நிலையம்

**திருக்குறள்—உரைவளம் பொருட்பால்**

சென்ற ஆண்டில், தருமபுர ஆதீனத்தார் வெளியிட்ட திருக்குறள் - உரைவளம் அறத்துப்பாலைப் படித்துப் பயின்ற தமிழ்மக்கள் பலர் பாராட்டி வருகின்றனர், அதன் அடுத்த பாலாகிய பொருட்பாலுக்கும் அந்த முறையில், பின்னருஞ் சில சேர்த்து எழுதப்பெற்ற உரையும் இப்பொழுது வெளிவந்துள்ளது: இதன்கண்ணும் பரிமேலழகர், மணக்குடவர், பரிதி, காளிங்கர், பரிப்பெருமாளென்னும் பண்டை உரையாசிரியர்களுடைய உரைகளை முறையே தொகுக்கப்பட்டுள்ளன; இவற்றோடு இந்தப் பொருட்பாற் பதிப்பில் ஒவ்வொரு அதிகாரத்துமுள்ள குறட்களின் கருத்து முழுவதும் தொகுத்து எழுதித் தொகுப்புரையெனப் பெயரும் இடப்பட்டிருக்கிறது; உரைப்பகுதிக்கு அடுத்த உரைவிளக்கப் பகுதியில் நுண்பொருண்மாலை சேர்க்கப்பெற்றுள்ளது; இதற்கடுத்துள்ளது மேற்கோட்பகுதி; இதில் இந்நூல் பழைய உரை நூல்களில் ஆங்காங்கு எடுத்தாளப்பெற்றுள்ள குறிப்புஞ் சந்தர்ப்பங்களும் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன; அடுத்ததாகிய ஒப்புமைப் பகுதி சங்ககாலமுதற் பிரபந்தகாலம் வரையிலும் இடமிடங்கள் தோறுஞ் செறிந்துப் பாடப்பட்டதெனபலதக் காட்டுவதாகும்; ஈற்றிலுள்ள குறிப்பு இந்நூலின் தொகுப்பாசிரியர் தமது கல்விச்செல்வம் கேள்விச் செல்வம் நுண்ணறிவின் மாண்பு முதலியவற்றைக் கொண்டு ஆக்கியதாகும்; இவைகளும் இங்கு எடுத்துக்காட்டப்படா இன்னுஞ் சிலவுஞ் சேர்ந்ததே உரைவளமாகும்; இந்த உரைவளத் தொகுப்பாசிரியராகிய வித்துவான் ச. தண்டபாணிதேசிகர் வயசில் இளைஞராயினும் அறிவில் முதியராய் இக்காலத்திலே தமிழறிஞர் பலராறபெரிதும பாராட்டப் பெற்றுள்ளவர்; இவர் தருமபுர ஆதீன வித்துவானாகவும், கல்லூரியாசிரியராகவும், பத்திரிகையாசிரியராகவும் கடமையேற்றுச் செந்தமிழ் சைவ சமயமென்னுமிவற்றின்பொருட்டுப்பெரிதும்உழைத்து வருகின்றார்; இவ்வித்துவான் தமிழ்மொழியையும சைவசாத்திரங்களையும் சிதம்பரம் ஆறுமுகநாவலர் கல்லூரிப் பேராசிரியராகிய தில்லைநாயகமுதலியார், மேற்படிகல்லூரித் தலைமையாசிரியர் ம. க. வேற்பிள்ளை, குறித்த கல்லூரி ஆசிரியரும் அதிபருமாயிருந்த ச. பொன்னம்பலப் பிள்ளை, ஈ. பொன்னுஓதுவார்மூர்த்தி மகாமகோபாத்தியாயர் சாமிநாத ஐயர் முதலானோரிடத்துப் பயின்றுள்ளவர்; இப்படியுள்ள பெரியாரிடத்துப் பாடங்கேட்கும் பேறுபெற்ற வித்துவான் தண்டபாணி தேசிகர் இயற்றிவரும் திருக்குறள் உரைவளத்தின் நுட்பங்களைப்பற்றிச் சொல்லவும்வேண்டுமா! தொகுத்துச் சொல்லுமிடத்து இதுகாறும் வெளிவந்த திருக்குறள் வெளியீடுகளெல்லாவற்றிலும் இத்திருக்குறள் உரைவளமே சிறந்துவருகின்றதெனலாம். இனி, இடம் பொருளேவலும் கல்வித்திறனுமிருக்கும்போது இத்த தேசிகர் இன்னும் என்னதான் செய்யமாட்டார்! இடம் பொருள் ஏவல் மூன்றுமாகவுள்ளவர், சைவச் செந்நெறியையும் தண்டமிழையும் இக்காலத்தில் எங்கும் ஓங்கவளர்த்துவரும் பேரபிமானியும், வள்ளலுமாகிய தருமபுர ஆதீனத்து 25-ம மகாசந்நிதானமாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகளாவர்; மகிமை வாய்ந்த இத் தம்பிரான் சுவாமிகள் செய்துவருஞ் செயற்கருஞ் செயல்கள் சைவவுலகமும் தமிழுலகமும் நேரில் அறிந்தனவாகும்; திருக்குறள் அறத்துப்பால் உரைவளம் சிறந்தமுறையில் வெளிவந்து ஆண்டொன்று கழிவதற்கிடையில் 70 அதிகாரங் கொண்ட பொருட்பால், அந்த அறத்துப்பாலைக்காட்டிலுஞ் சிறந்தமுறையில், "கிரவுன்" பிரமாணத்தாள் நான்கு பக்கங்கொண்ட 584 பக்கங்களுடன் உயர்ந்த காகிதத்தில் தெளிவான முறையில் அச்சிட்டு வனப்பு வாய்ப்பக் கட்டப்பெற்று வெளிவந்ததென்றால் மேற்படி தம்பிரான் சுவாமிகள் வித்துவான் என்னுமிருவருடைய கருமமாற்றுந் திறனை யென்னென்று சொல்லிப்பாராட்டுவது! காமத்துப்பால் உரைவளமும் ஆண்டவனருளால் விரைவில் வெளிவருமெனத் தமிழுலகம் எதிர்பார்த்திருக்கலாகும். பிரதி யொன்றன் விலை ரூபா 7. பெற விரும்புவோர் K. பாலநாதன், செயலாளர், "ஞானசம்பந்தம்" காரியாலயம், தருமபுரம், மாயூரம் P. O; என்ற விலாசத்திற் பெறலாகும். எமது பார்வைக்கனுப்பிய பிரதியை ஆர்வத்துடன் ஏற்றும்.

## உலகம் பலவிதக்கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

யடியிருக்க முடியாது; நீர் பிரமசாரியாயிருக்கத் துணிவீரானால், உம்மை நம்பியிருக்கும் வனசாவும் விவாகமில்லாமலேயிருப்பாள்; அதுதான் பெரும்பழி" என்றான்; யோசித்தான் பத்மநாதன்; "ராதா! நீர் இப்பொழுது என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்? என்று கேட்டான்."

ராதா: வனசாவைக் கல்யாணஞ் செய்துகொண்டு இனிது வாழ வேண்டுமென்று நான் சொல்லுகிறேன்.

பத்மநாதன்: அப்படியானால் நீர்?

ராதா: நான் இப்பொழுது என் வாசஸ்தானத்திற்குப் போகிறேன்; இனிமேல் வந்து உங்களைக் காணுவேன்; ஆனால் நான் சொன்னபிரகாரம் நீங்கள் செய்தாற்றான் நான் உங்களைக் காணுவேன்; உங்களுடன் பேசுவேன், நீங்கள் ஒன்றியாயிருந்தால் இனிமேல் இந்த இடத்திற்கு வரமாட்டேன்; வேறு எந்த இடத்திற் கண்டாலும் உங்களுடன் பேசமாட்டேன்; என்மேற் குறைவெண்ண வேண்டாம்; போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, பத்மநாதன் பதில் சொல்வதற்கு முந்திபே ராதா இரதத்திலேறிக்கொண்டு போய்விட்டான். —— (வரும்.)

## சித்த மாணவ கழகம்

### சரசுவதி பூசை விழா

கொழும்பு அரசினர் சுதேச வைத்தியக் கல்லூரி மண்டபத்தில் மேற்படி கழகத்தின் ஆதரவிலே 9-10-51 (இன்று) பிற்பகல் 5½ மணிக்குச் சரஸ்வதி பூசைவிழா நடைபெறும், கௌரவ சேர். O. E. குணதிலகா தலைமை வகிப்பாரம்.

L. K. S. LEBBAY BROS
GOLD HOUSE

தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்,
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

# திருச்சி ரேடியோ

## ✻ இசைத்தட்டு

**திருச்சி புதன் அக்டோபர் 10**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 சலோசனு மஹாதேவன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 சதம்பம்* 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 செம்பை வைத்தியநாத பாகவதர்* 2 தமிழில்செய்தி 2 10 எம் ஞானசம்பந்தம் பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 30 வயலின் ஆ இ ரே வித்வான் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள் கேட்டவை* 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 இசைச்செல்வம் 7 45 மாகாண முன்னேற்றம் —பேச்சு 8 தேவி பட்டாபிஷேகம் சங்கீத உபன்யாசம் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 சலோசனு மஹாதேவன் பாட்டு 10 முடிவு.

**திருச்சி வியாழன் அக் 11**

காலை 7 10 ஆரம்பம்* 7 15 தமிழில் செய்தி 7 30 கே வாசுதேவன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 கலாசாலைப்பள்ளிகளுக்கு 1 சித்ரகானம்* 1 15 பெண்ணுலகம் 1 30 இருகுரலிசை* 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 குரலிசை* 2 தமிழில் செய்தி 2 10 நாட்டியசங்கீதம்* 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு.

5 30 கிளாரினெட் ஆ இ ரே வித்வான் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 நாட்டுப்பாடல்கள் 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம்* 8 இலக்கியவாசகம் பி ராமதாஸ் —விளக்கம் 8 15 ராகம், தானம், பல்லவி, முசிரி சுப்ரமணிய ஐயர் பாட்டு ஆர் கே வெங்கடராம சாஸ்திரி வயலின் கோயமுத்தூர் என் ராமசாமி மிருதங்கம் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 கே வாசுதேவன் பாட்டு 10 முடிவு.

**திருச்சி வெள்ளி அக் 12**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 டி ஆர் நவனீதம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு.

1 சதம்பம்* 1 40 ஹிந்தியில செய்தி 1 50 வீணை* 2 தமிழில் செய்தி 2 10 ஆர் பி செல்லப்பா ஐயங்கார் பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 30 இலுப்பூர் நடேசபிள்ளை நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 எ டி முகம்மது இப்ராஹீம் பாட்டு 6 25 இடைவேளை சங்கீதம்* 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழிலசெய்தி 7 30 சந்திரிகையின் கதை தொடர் நாவல் 7 45 முஹாரம் திருப்பாடல்கள்* எ முஹம்மது இப்ராஹிம் —பேச்சு 8 டி ஆர் நவனீதம் பாட்டு 8 30 குரல்வகை* 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 இலுப்பூர் நடேசபிள்ளை நாகஸ்வரம் 10 முடிவு.


வந்திருக்கின்றன! வந்திருக்கின்றன!!

## திறமான தேக்கமரங்கள்

பல திணிசுகளிலும் வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

74 ஆஸ்பத்திரி ரோட்

யாழ்ப்பாணம்

Std 2



## சாலாமிஸ்ரி லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல, புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக்குறைவு, சூலை, சத்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். தேகபுஷ்டி, வஜ்ரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் சேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறாத்தல் விலை ரூபாய் 25-00, அரைறாத்தல் விலை ரூபாய் 12-50
கால்றாத்தல் விலைரூபாய் 6·75

வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.

வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்

### சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினுல் காலை பல் விளக்கி வந்தால், வாய்நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

K. ஆறுமுகம்பிள்ளை

நி 8/1 தட்டாதெரு

கோட்டைமுனை, மட்டக்களப்பு

எமதுவிலாசம்

M 92


# சிவஞானபோதச் சொற்பொழிவு

1-ம் பக்கத் தொடர்ச்சி

டச் செய்வதும் இவ்வாறே. அந்த உயிர்போல முதல்வனும அவ்வுயிரோடு உயிராய் நின்றல்மாத்திரம் அவ் வுயிர் உலகப் பொருளகளை அறிந்து வினைகளை ஈட்டி இறத்தல் பிறத்தல்களைப் புரியும். இவ்வாறன்றி முதல்வன் வியாபகமாய் மாத்திரம் நிற்கஇப்பெத்தஉயிர்கள் அறியாவோ எனின்? அறியா. அறியுமேல் எல்லா உயிர்களும ஒன்றுபோலறிதல் வேண்டும். அவ்வாறன்றிஉயிர்களபல்வேறுபடஅறிவதால் முதல்வன் ஒவ்வொரு பெத்தவுயிரோடும்அவ்வவ்வுயிராய் நிற்றல் அவசியம் வேண்டப்படும். இதுவே இறந்தல் பிறத்தல் புரியும் உயிரோடு ஒன்றாய் நிற்குந் தன்மை. இத்தன்மையை இறத்தல் பிறத்தல் புரியும எலலா உயிர்களோடுங் கொண்டு முதல்வன் உபகரித்து வருகின்றான். இக்கருத்தையே இச்சூத்திரம் போக்கு வரவு புரியும் உயிர்களோடு (முதல்வன) 'அவையேயாய் நிற்கும்' என்று இனைபுற உணர்த்தும்.

**முதல்வன் அவ்வுயிர்களின் வேறுயும் நிற்பன்**

உயிர்கள் இறத்தல் பிறத்தல் புரியுங்கால் முதல்வன் அவைகளோடு ஒன்றாய் நிற்பானென்று சொன்னோம. முதல்வன் இவ்வாறு இவ்வுயிர்களோடு ஒன்றாய்நின்று உபகரித்தல் மாத்திரம் போதுமா? வேறு நின்று உபகரித்தலும் வேண்டுமா? என்பதை ஆராய்வாம். கண் ஒரு பொருளைக் காணுதற்கு உயிர் கண்ணொடு கண்ணாய் நின்றல்மாத்திரம் போதாது. போதுமேல் அருக்கன் ஒளி இல்லாத காலத்தும் கண் காணல்வேண்டும். அஃதின்றாதலால், கண்ணொடு ஒன்றாய் நின்று உபகரித்தலாகிய உயிர் உபகாரம ஒன்றே அக் கண்ணினைக் காணச் செய்தற்குப் போதாதென முடியும். அக்கண்ணுக்கு வேறுநின்று உபகரிப்பதாகிய அருக்கன் உபகாரமும வேண்டுமெனவும் முடியும். இறத்தல் பிறத்தல் புரியும் உயிர்களுக்கு வேண்டப்படும உபகாரங்களும இவ்வாறே. அவ்வுயிரினோடு உயிராய் நின்று உபகரிப்பதாகிய உபகாரம மாத்திரம் போதாது. அவ்வுயிர்க்கு வேறுநின்று உபகரிப்பதாகிய உபகாரமும்வேண்டும். இவ்வாறு வேறுநின்று உபகரிப்பதற்கு முதல்வனையன்றி வேறுபொருளில்லை. முதலவன் எக்காலத்தும வியாபகமாதலால் இறத்தல் பிறத்தல் புரியும உயிரோடு அவ்வுயிராய் நிற்கும போது அவனது வியாபகத்திற்குக் குறைவில்லை. ஆதலால் இறத்தல் பிறத்தல் புரியும உயிரோடு அவ்வுயிராய் நின்று உபகரிப்பதோடு அவ்வுயிர்க்கு வேறுநின்று உபகரித்தலும முதல்வனுக்கு கூடும். எனவே முதலவன் அவ்வுயிர்களின் வேறுமாய் நிற்கின்றான் எனமுடியும. இத்தன்மையும் முதல்வன எலலா உயிர்களோடுங் கொண்டுள்ளான் இக்கருத்தையும் உணர்த்தவே இச்சூத்திரம '(உயிர்கள) இருவினையிற் போக்குவரவு புரிய (முதல்வன) ஆணையாய் நிற்கும்' என்று இனைபுற ஓதியது.

# நெசவுத் தொழிலை விருத்தி செய்ய அரசினரின் நோக்கம்

உள்ளூர்க் கைத்தறிகள் மூலம் நெசவு தொழில் செய்யும் பொருட்டு இந்திய அரசாங்கம் 3250 "மூடை" நூல இலங்கைக்கு அனுப்பத் தீர்மானித்துள்ளது. இப்போது இலங்கையிலுள்ள 8000 கைத்தறிகளுள் போதிய நூலில்லாமையால் ஆக 6000 தறிகளே உபயோகிக்கப்படுகின்றன. இந்திய அரசாங்கம் மேற்கூறப்பட்ட 3250 மூடை நூல்களையும ஏற்றுமதி செய்யலாமென இந்திய வியாபாரிமாருக்கு அனுமதியளித்திருக்கிறது. இலங்கைக் குடிசைக் கைத்தொழிற் பகுதியார் இங்குள்ள கூட்டுறவு மொத்த வியாபாரத்தாபனத்தை இந்த நூலை இந்திய வியாபாரிகளிடம் வாங்கும்படி கேட்டிருக்கின்றனர். 3-50 மூடை நூலும இவ்வூர் உபயோகத்துக்கு மூன்று மாதங்களுக்குப் போதியதாம். யப்பானிலிருந்தும் நூல் வரவழைக்கப்படலாமோ வென்பது விசாரணை செயயப்படுகின்றது.

இங்கு நெசவாகும் "சாரம்" வேட்டி, சேலை யென்பனவற்றைத் திறம்பட ஆக்குதற்கான ஓர் திட்டத்தை, குடிசைக் கைத்தொழிற் பகுதித் தலைவர் திரு M. M. சுந்தரம ஆயத்தஞ் செய்திருக்கின்றனர். பருத்தியை வர்த்தகத்துக்குரிய அளவுக்குப் பெருக்கச் செய்கை பண்ணலாமா வென்பது ஆராயப்படுகிறது. இப்போது பருத்தி அம்பாகதோட்டையிற் செய்கை பண்ணப்படுகிறது. கிருஷிகப் பகுதியார் வரண்ட பகுதிகளிலும் பருத்திச் செய்கையைப் பரீக்ஷித்துப் பார்க்கின்றனர். கைத்தொழில் மந்திரிப் பகுதியார் நூல்நூற்கும் ஆலையொன்றைத் தாபிக்கலாமா என ஆலோசிக்கின்றனர்.

# முத்துக் குளிப்பு அடுத்தாண்டு நடக்குமாம்

சென்ற 1925-ம் ஆண்டு சிலாபக் கடலில் முத்துக்குளித்த பிறகு இத்துறைவலையில் முத்துக்குளிப்பு நடக்கவில்லை, ஆனால் அடுத்த ஆண்டு (1952) பிவர்வரி மார்ஜ் ஏப்பிரல் மாசங்களில் முத்துக்குளிப்பு நடத்த அரசினர் உத்தேசித்திருக்கின்றனராம்; முத்துக் குளிப்புக் காரியஸ்தானம் புத்தளத்திற்கும மன்னாருக்கு மிடையேயுள்ள மறிச்சுக்கட்டி எனனுந் தானமாகும்; சமீபத்திலுள்ள முள்ளிக்குளத்தி லிருந்தே வள்ளங்கள புறப்படும்; அரிப்பு மேற்கு மன்னார் தெற்குக் கடற்கரைகளிலிருந்து 15 மைல்வரை கடலிற் சென்றபின் அத்தானத்திலிருந்து கடலுள் அப்பாலும் 50 மைல் தூரத்திலுள்ளகடலே முத்து விளையுந் தானமாம்; குளித்தெடுக்கப்பட்ட முத்துக்கள கொண்டுவந்து சிதம்பியாறறங் கரையில் அழுகவைத்து உடைக்கப்படுமாம்; அடுத்தவருடம முத்துக் குளிப்பதால 7 லட்சம் ரூபா பெறுமதியான முத்தும் நான்கு லட்சம் ரூபா செலவும் வருமெனவும், செலவுபோக்கி மூன்று லட்சமரூபா இலங்கை யாசினருக்கு வருவாயாகு மெனவும் மதிக்கப்படுகிறது.

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Tuesday October 9, 1951